# ஆகஸ்ட்– 14 – செவ்வாய்

## புனித மாக்சிலியன் கோல்ப்

## ஏனெனில், உம் ஒழுங்கு முறைகள் எனக்கு இன்பம் தருகின்றன: திபா. 119:24

### முதல் வாசகம் : ஏசேக்கியல் 2 : 8 – 3: 4

நீயோ மானிடா! நான் உனக்குச் சொல்வதைக்கேள். அந்தக் கலக வீட்டாரைப்போல் நீயும் கலகக்காரனாய் இருந்துவிடாதே. உன்வாயைத் திறந்து நான் உனக்குத் தருவதைக் தின்றுவிடு" என்றார்.அப்போது என்னைநோக்கி ஒருகை நீள்வதைக் கண்டேன். அதில் சுருளேடு ஒன்று இருந்தது.அவர் அச்சுருளேட்டை என்முன் விரித்தார். உள்ளும் புறமும் எழுதப்பட்டிருந்த அதில் கதறல்களும் புலம்பல்களும், கேடுகளும் எழுதப்பட்டிருந்தன.அவர் என்னை நோக்கி, "மானிடா! நீ காண்பதைத் தின்றுவிடு. இச்சுருளேட்டைத் தின்றபின் இஸ்ரயேல் வீட்டாரிடம் போய்ப்பேசு" என்றார். நானும் என் வாயைத்திறக்க, அவர் அச்சுருளேட்டை எனக்குத் தின்னக் கொடுத்தார். மேலும் அவர் என்னைநோக்கி, "மானிடா! நான் உனக்குத் தருகின்ற இச்சுருளேட்டைத் தின்று உன்வயிற்றை நிரப்பு" என்றார். நானும்தின்றேன். அது என்வாயில் தேன்போல் இனித்தது.மேலும் அவர் என்னை நோக்கி, "மானிடா! புறப்படு. இஸ்ரயேல் வீட்டாரிடம் போய் என்சொற்களை அவர்களுக்கு எடுத்துக்கூறு.

**பதில்பாடல் :** உம் சொற்கள் என் நாவுக்கு எத்துணை
இனிமையானவை

### நற்செய்தி : மத்தேயு 18 : 1 – 5, 10, 12 – 14

அக்காலத்தில் சீடர்கள் இயேசுவை அணுகி, "விண்ணரசில் மிகப் பெரியவர் யார்?" என்றுகேட்டார்கள்.அவர் ஒரு சிறுபிள்ளையை அழைத்து அவர்கள் நடுவில் நிறுத்தி,பின்வருமாறு கூறினார்" நீங்கள் மனந்திரும்பிச் சிறு பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால் விண்ணரசில் புகமாட்டீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். இந்தச் சிறுபிள்ளையைப்போலத் தம்மைத் தாழ்த்திக் கொள்பவரே விண்ணரசில் மிகப்பெரியவர். இத்தகைய சிறுபிள்ளை ஒன்றை என்பெயரால் ஏற்றுக்கொள்பவர் எவரும் என்னையே ஏற்றுக்கொள்கிறார்."இச்சிறியோருள் ஒருவரையும் நீங்கள் இழிவாகக்கருதவேண்டாம் கவனமாயிருங்கள்! இவர்களுடைய வானதூதர்கள் என் விண்ணகத்தந்தையின் திருமுன் எப்பொழுதும் இருக்கின்றார்கள் என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். இந்த நிகழ்ச்சியைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? ஒருவரிடம் இருக்கும் நூறு ஆடுகளுள் ஒன்று வழிதவறி அலைந்தால், அவர் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் மலைப்பகுதியில் விட்டுவிட்டு வழிதவறி அலையும் ஆட்டைத் தேடிச்செல்வார் அல்லவா? அவர் அதைக் கண்டுபிடித்தால் வழிதவறி அலையாத தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் பற்றி மகிழ்ச்சியடைவதைவிட வழி தவறிய அந்த ஓர் ஆட்டைப்பற்றியே மிகவும் மகிழ்ச்சியடைவார் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்.அவ்வாறே இச்சிறியோருள் ஒருவர்கூட நெறிதவறிப் போகக்கூடாது என்பதே உங்கள் விண்ணகத் தந்தையின் திருவுளம்" என்றார்.

**தியானம்:** இன்றைய தியான வாசகங்கள் பாவங்களின் நிமித்தம் இறைவனின் அன்பை சுவைக்க மறந்தவர்களாக அவரைவிட்டு வழிதவறிய ஆடுகள் போன்று வாழ்ந் கொண்டிருக்கின்றோம். இருப்பினும் தொலைந்த ஆட்டைக கண்டுபிடித்து உணவளித்து. தாகம் தீர்த்து நோய்வாய்படும் போது மருந்துகட்டி பாதுகாத்து வருகிறார் இறைமகன் இயேசு, ஆனால் தனது சாயலாகப் படைக்கப்பட்ட எங்களை அதற்கு மேலாக பாதுகாத்து வழிநடத்துவார் என்பதை சிந்திக்க மறந்துவிடுகிறோம். இவ்வாறு பாவத்தின் நிமித்தம் மூழ்கிக் கிடக்கும் எங்களை, தந்தையின் சித்தத்தின் நிமித்தம் இவ்வுலகிற்கு வந்து மீட்டெடுத்தார். அதை உணராது நாங்கள் மீண்டும் பாவத்தில் வீழ்ந்தோமாயின் எவ்வாறு இறைவனது அழைப்பிற்கு செவிசாய்க்க முடியும். ஆண்டவருக்கு எதிராக கலகம் செய்த வீட்டாருக்கு நடக்கவிருப்பதை அறிவிக்க எசேக்கியலை தெரிந்தது போல் ஆண்டவர் எப்படி எங்களைத் தெரிந்தெடுப்பார். நற்செய்தி வாசகத்தில் இயேசு விண்ணரசிற்கு செல்வதற்கு எப்படி இருக்கவேண்டு மென்பதை ஒருசிறுபிள்ளையை முன்னுதாரணம் காட்டி விபரிக்கின்றார். ஏனெனில் சிறியபிள்ளையின் உள்ளத்தில் கள்ளம் கபடமற்று எந்த வேளையும் அன்பு கொண்டதாகவே இருக்கும். இன்று நாங்கள் எங்களைப் பார்த்துக் கேட்க வேண்டிய கேள்வி என்ன வென்றால் எப்படி வாழ்கிறோம் என்பதாகும். ஏனெனில எமது குடும்பத்தில், நண்பர்கள் மத்தியில் போட்டி, பொறாமை, விட்டுக் கொடுக்காததன்மை இவற்றினால் நிறைந்து வாழ்கிறோம். இவ்வாறான பாவவழ்விலிருந்து விடுபட்டு இறைவனோடு விண்ணரசில் இணைந்து கொள்ள எங்களைத் தயார்படுத்தும் போது பலபோராட்டங்கள், சவால்கள் எதிர்கொள்ளத்தான் வேண்டியிருக்கும் யாவற்றையும் இறைவனிடம் ஒப்புக் கொடுத்து இறைவார்த்தைக்கு முன்னுரிமை கொடுத்தவர்களாக தேவையற்ற உலககாரியங்களுக்குள் அகப்படாமல் விண்ணரசில் இறைவனோடு வாழ எங்களைத் தயார்படுத்தவோம்.